1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்தரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) இவ்வாரம்ப சுகாதார நிலேயத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கு குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் பொதுப் பணி மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர், வரைபடம் மற்றும் மதிப்பீடு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறுர். அவைகள் கிடைத்த பின் இந்த ஆரம்பச் சுகாதார நிலேயத்திற் கான கட்டிடங்கள் கட்ட அனுமதி வழங்குவது பரிசீலிக்கப்படும்.

Candidates admitted to M. D. Course.

* Q. No. 173— Thiru K. SUPPU : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether the Government are aware of the fact that candidates who have been admitted to M. D. (Preventive Medicine) course in Madras Medical College are working and drawing full salary from the Department ; and

(b) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்தரராஜன் :(அ) ஆம். தற்போது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது.

(ஆ) சென்னே மருத்துவக் கல்லூரியில் கீழ்க்கண்ட இருவர் எம். டி. (சமூக மற்றும் தடுப்பு மருந்து) படிப்பு படித்துக் கொண்டு இருக்கிறுர்கள்.

(1) டாக்டர் கமால் ஷெரிப்.

(2) டாக்டர் உதய சங்கர்.

உதவிப் பேராசிரியராக பணியாற்றும் டாக்டர் கமால் ஷெரிப்பை பொறுத்தவரையில், உதவிப் பேராசிரியர் பதவியில் இருந்து கொண்டு சம்பளம் பெற்றுக் கொண்டு எம்.டி. (சமூக மற்றும் தடுப்பு மருந்து) படிப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள் ளது.

டாக்டர் பி.எம். உதய சங்கர் என்பவர் நல்வாழ்வு அலுவலர் பதவிக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணேக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் சென்னே மருத்துவக் கல்லூரி யில் கொள்ளே நோய்ப் பிரிவில் நல்வாழ்வு அலுவலராக நிய மிக்கப்பட்டார். அவர் 21–9–77 அன்று இந்த பணியில் சேரும் போது எம்.டி. (சமூக மற்றும் தடுப்பு மருந்து) படிக்கும் விஷ யத்தை இவர் இயக்குநருக்கோ, அரசாங்கத்துக்கோ தெரிவிக்க வில்லே.

அரசின் ஒப்புதல் பெறுமல் இவர் இந்தப் படிப்பு, கொள்ளே நோய் பிரிவில் நல்வாழ்வு அலுவலராக வேலே செய்துக் கொண்டே படிப்பதினுல், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.